# ஏப்ரல் 28 - பாஸ்கா கால 2ம் ஞாயிறு
## இறை இரக்கப் பெருவிழா
### உங்களுக்கு அமைதி உரித்தாகுக'' - யோவா.20:19

**முதல் வாசகம் : திருத்தூதர் பணி 5 : 12 – 16**

அந்நாட்களில் மக்களிடையே பல அரும் அடையாளங்களும் அருஞ்செயல்களும் திருத்தூதர் வழியாய்ச் செய்யப்பட்டன. அனைவரும் சாலமோன் மண்டபத்தில் ஒருமனத்தவராய்க் கூடி வந்தனர். மற்றவர் யாரும் இவர்களோடு சேர்ந்துகொள்ளத் துணியவில்லை. ஆயினும் மக்கள் இவர்களைப் பற்றிப் பெருமையாகப் பேசினர். ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்ட திரளான ஆண்களும் பெண்களும் இவர்களோடு சேர்க்கப்பட்டார்கள். பேதுரு நடந்து செல்லும்போது அவர் நிழல் சிலர் மேலாவது படுமாறு மக்கள் உடல்நலமற்றோரைக் கட்டில்களிலும் படுக்கைகளிலும் கிடத்திச் சுமந்துகொண்டுவந்து வீதிகளில் வைத்தார்கள் எருசலேமைச் சுற்றியிருந்த நகரங்களிலிருந்து மக்கள் உடல்நலமற்றோரையும், தீய ஆவிகளால் இன்னலுற்றோரையும் சுமந்து கொண்டு திரளாகக் கூடிவந்தார்கள். அவர்கள் அனைவரும் நலம் பெற்றனர்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே. இன்று அக்களிப்போம். அகமகிழ்வோம்.

**இரண்டாம் வாசகம் :திருவெளிப்பாடு 1:9–11–13,17-19**

உங்கள் சகோதரனும், இயேசுவோடு இணைந்த நிலையில் உங்கள் வேதனையிலும் ஆட்சியுரிமையிலும் மனவுறுதியிலும் பங்குகொள் பவனுமான யோவான் என்னும் நான் கடவுளின் வாக்கை அறிவித்து இயேசுவுக்குச் சான்று பகர்ந்ததால் பத்மு தீவுக்கு வரநேர்ந்தது. ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று தூய ஆவி என்னை ஆட்கொள்ளவே எனக்குப் பின்னால் பெரும்குரல் ஒன்று எக்காளம்போல முழங்கக் கேட்டேன். "நீ காண்பதை ஒரு சுருளேட்டில் எழுதி, எபேசு, சிமிர்னா, பெர்காம், தியத்திரா, சர்தை, பிலதெல்பியா, இநான் அவரைக் கண்டபொழுது செத்தவனைப்போல் அவரது காலில் விழுந்தேன். அவர் தமது வலக் கையை என்மீது வைத்துச் சொன்னது. "அஞ்சாதே! முதலும் முடிவும் நானே. வாழ்பவரும் நானே. இறந்தேன் ஆயினும் இதோ என்றென்றும் வாழ்கின்றேன். சாவின் மீதும் பாதாளத்தின் மீதும் எனக்கு அதிகாரம் உண்டு. எனவே நீ காண்பவற்றை, அதாவது இப்பொழுது நிகழ்கின்றவற்றையும் இனி நிகழவிருப்பவற்றையும் எழுதிவை.லவோதிக்கேயா ஆகிய ஏழு இடங்களிலும் உள்ள திருச்சபைகளுக்கு அதை அனுப்பி வை" என்று அக்குரல் கூறியது.

**நற்செய்தி : யோவான் 20 : 19 - 31**

அன்று வாரத்தின் முதல் நாள். அது மாலை வேளை. யூதர்களுக்கு அஞ்சிச் சீடர்கள் தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடிவைத்திருந்தார்கள். அப்போது இயேசு அங்கு வந்து அவர்கள் நடுவில் நின்று, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!" என்று வாழ்த்தினார். இவ்வாறு சொல்லிய பின் அவர் தம் கைகளையும் விலாவையும் அவர்களிடம் காட்டினார். ஆண்டவரைக் கண்டதால் சீடர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள். இயேசு மீண்டும் அவர்களை நோக்கி, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக! தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்பகிறேன்" என்றார்.இதைச் சொன்ன பின் அவர் அவர்கள்மேல் ஊதி, "தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படா" என்றார். பன்னிருவருள் ஒருவரான திதிம் என்னும் தோமா, இயேசு வந்தபோது அவர்களோடு இல்லை. மற்றச் சீடர்கள் அவரிடம், "ஆண்டவரைக் கண்டோம்" என்றார்கள். தோமா அவர்களிடம், "அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து, அதில் என் விரலை விட்டு, அவர் விலாவில் என் கையை இட்டாலன்றி நான் நம்பமாட்டேன்" என்றார். எட்டு நாள்களுக்குப்பின் அவருடைய சீடர்கள் மீண்டும் உள்ளே கூடியிருந்தார்கள். அன்று தோமாவும் அவர்களோடு இருந்தார். கதவுகள் பூட்டப்பட்டிருந்தும் இயேசு உள்ளே வந்து அவர்கள் நடுவில் நின்று, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!" என்று வாழ்த்தினார். பின்னர் அவர் தோமாவிடம், "இதோ! என் கைகள். இங்கே உன் விரலை இடு. உன் கையை நீட்டி என் விலாவில் இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கைகொள்" என்றார். தோமா அவரைப் பார்த்து, "நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!!" என்றார். இயேசு அவரிடம், "நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்" என்றார். வேறு பல அரும் அடையாளங்களையும் இயேசு தம் சீடர்கள் முன்னிலையில் செய்தார். அவையெல்லாம் இந்நூலில் எழுதப்படவில்லை. இயேசுவே இறைமகனாகிய மெசியா என நீங்கள் நம்புவதற்காகவும், நம்பி அவர் பெயரால் வாழ்வு பெறுவதற்காகவுமே இந்நூலில் உள்ளவை எழுதப்பெற்றுள்ளன.

**தியானம் :** இன்று இறை இரக்கத்தின் பெருவிழாவை கொண்டாடுகின்றோம். இறை இரக்கத்தின் ஆண்டவர் உயிர்த்த கிறிஸ்துவில் அமைதிபெற நாம் அனைவரும் அழைக்கப்படுகின்றோம். குறிப்பாக இன்றைய நாள் இறைவார்த்தைப் பகுதிகள் உண்மையான கிறஸ்தவ வாழ்வின் விழுமியங்களை பின்பற்றி வாழ்வதன் மூலம் அந்த அமைதியை பெற்றுக்கொள்ள முடியும் என்பதை தெரிவுபடுத்துகின்றது. ஆதிமுதல் இயேசுவின் காலம்வரை மட்டுமல்ல தொடர்ந்தும் இறை நியமங்களைவிட்டு விலகி இறை இரக்கத்தை மறந்தவர்களாக மனிதகுலம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இன்றைய நற்செய்தியல் உயிர்த்த இயேசு சீடர்களுக்கு தோன்றி "உங்களுக்கு அமைதி உரித்தாகுக"(யோவா.20:19) என்று கூறி வாழ்த்துகின்றார். இயேசுவைக் காண்பதும் அவரில் விசுவாசம் வைப்பதும் இயேசுவை பின் தொடர்வதும் சமாதானத்தை அழிக்கக்கூடிய அனுபவம். இன்று எம்மில் அதிகமானோர் சமாதானத்தை தேடி அலைகின்றோம். அந்த உண்மையான சமாதானம் இயேசுவிடம்தான் கிடைக்கும். அவருடைய போதனையில் இருந்துதான் மன அமைதி பெற முடியும். நம் பகைவர்களை அன்பு செய்யும் போது, நம்மை சபிப்பவர்களுக்கு ஆசி கூறும் போதும், எம்மை துன்புறுத்துவோருக்காக செபிக்கும் போதும், இறை சமாதானத்தை பெற்றுக்கொள்ள முடியும். ஆம் உலகம் தரமுடியாத அமைதியை தருவேன் என்று கூறிய இயேசுவில் நம்பிக்கை கொண்டு அன்புறவோடு அமைதி வாழ்வு வாழ இறைவனின் இரக்கத்தை இறைஞ்சுவோமாக.